திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு அரசு எவ்வளவு மதிப்பீட்டுத் தொகை என்று மதிப்பீட்டுள்ளது? இந்தத் திட்டத்தின் மூலமாக எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது ஆரம்ப நிலையில் உள்ளது. ரெக்கனைசன்ஸ் என்று சொல்வார்களே, அந்த ஆரம்ப நிலையில் தான் இருக்கிறது. ஆரம்ப சர்வே முடிந்த பிறகு தான் எவ்வளது செலவாகும் எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை : கொல்லிமலையைத் தவிர சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற நீர்வீழ்ச்சிகளில் ஓடிக்கொண்டிருக்கின்ற நீரைப் பயன்படுத்தி புனல்மின் திட்டம் ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகள் ஏதேனும் உள்ளதா? அப்படியிருக்குமானால் எந்த எந்த இடங்களில் அப்படிப்பட்ட புனல் மின் நிலையங்கள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அய்யாறு ஆறு திட்டம் ஏர்க்காடு பம்ப்ட்ஸ்டாரேஜ் திட்டம் 100 மெகாவாட் கிடைக்கும் என்று ஆராயப்படுகிறது. பழமலை பம்ப்டு ஸ்டோரேஜ் திட்டம் 100 மெகாவாட் கிடைக்கும் என்று ஆராயப்படுகிறது. வேதாநிதி ஹைட்ரோ ஸ்கீம் 25 மெகாவாட் கிடைக்கும் என்று ஆராயப்படுகிறது.

ஆரல்வாய் மொழி அண்ணா கலைக்கல்லூரிக்கு நிலப்பதிவு

வினா எண் 434 : திரு. சு. முத்துகிருஷ்ணன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி தொகுதி, ஆரல்வாய்மொழி அண்ணா கல்லூரிக்கு பாசன குளத்தில் இருந்து நிலம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் பாசனம் பாதிக்காமல் இருக் லம் திரும்ப எடுக்கப்படுமா ?

(இ) பாசன வசதி பாதிக்கப்பட்டுள்ள நிலங்களின் அளவு என்ன?

1981 மார்ச் 23]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, புல எண் 108-3, புல எண் 108-4-இல் உள்ள நிலங்களை அறிஞர் அண்ணா கல்லூரிக்கு வருவாய் வாரியம் கொடுத்திருக்கிறது. இடையே 108-2 இல் ஓடை இருக்கிறது. அந்த ஓடையிலே தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே எந்தவிதமான பாதகமும் விவசாயிகளுக்கு ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி தனியார் கல்லூரி என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். தனியார் கல்லூரிக்கு அரசினுடைய இடங்களாக இனாமாக வழங்கப்பட்டபோது அரசு கொள்கையாக முடிவு எடுக்கப்பட்டு வழங்கப்பட்டதா, இல்லையேல் தனிப்பட்டவர் செல்வாக்கினால் இடங்கள் வழங்கப்பட்டதா அதற்கான காரணங்கள் என்ன என்பதை அரசு ஆராயுமா? இல்லையேல் தனியார்கள் நாங்கள் கல்லூரிகளைத் திறக்கிறோம் என்று சொல்லி அரசாங்கத்திடம் நிலங்களைக் கேட்டால் அரசாங்கம் இதுபோல் வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி நிலையங்கள், மருத்துவ மனைகளுக்கு அரசு நிலம் கொடுப்பது வழக்கமாக இருந்தது. தனியார் கல்லூரிகள் என்றாலும் அவைகள் அரசு உத்திரவுக்கு ஏற்பதான் நடத்தப்படவேண்டும். தனியார் கல்லூரிகள் என்பதாலேயே அரசு நிலம் கொடுக்கக்கூடாது என்ற உத்திரவு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தனியார் கல்லூரிகளுக்கு இது போன்று கேட்கிறபோது கொடுக்கலாம் அப்படிக் கொடுத்துள்ளதில் எந்தவிதமான பாதகமும் விவசாயிகளுக்கு ஏற்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் உண்மையிலேயே இதுபோன்ற இடம் கொடுக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று மக்கள் புகார்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது கொடுக்கப்பட்டகாலத்திலே முன்னால் அரசு இருந்த காலத்திலே தனியார் ஒருவருடைய செல்வாக்கு காரணமாக கொடுக்கப்பட்டதா? அதிலே ஏதாவது ஊழல் நடந்திருக்கிறதா என்பதைப்பற்றி நான் கேள்வி கேட்கிறேன்.

[1981 மார்ச் 23

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, ஊழல் நடந்ததா இல்லையா என்பதைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் தனியாக விசாரித்துப் பதில் சொல்ல முடியும்.

தீ விபத்தில் வீடிழந்தவர்களுக்கு அரசு உதவி.

*வினா எண். 435: திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீ விபத்தில் வீடு இழந்தவர்களுக்கு அரசு அளிக்கும் உதவிகள் 10 ரூபாய்க்கு மேல் கிஸ்தி செலுத்துபவர்களுக்கு இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அவ்விதியைத் திருத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே தீயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் நிலவரி செலுத்துவது ரூபாய் பத்தும் அதற்கும் குறைவாக இருந்தால் அரசு எல்லாவிதமான உதவிகளையும் செய்கிறது. சிலயிடங்களில் பத்து ரூபாய்க்கும் அதிகமாக இருந்தாலும் அங்கேயிருக்கின்ற நிலைமைக்கேற்றவாறு இடத்திற்கேற்றவாறு நஷ்டத்திற்கேற்றவாறு அந்த விதியைத் தளர்த்தி அவர்களுக்கு உதவி செய்வதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 'கேர்' நிறுவன உதவியுடன் சுகாதார கல்வித்திட்டம்

*வினா எண். 436: திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டத்தில் கேர் நிறுவன உதவியுடன் சுகாதார கல்வித்திட்டம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?